## விழிப்போடு இருப்போம்... தேர்தல் கமிஷனின் ஆதரவோடு வருகிறது பா.ஜ.க.!

# தமிழ்நாட்டில் மீண்டும் தளபதியை முதல்வர் ஆக்குவோம்!

### தூத்துக்குடி 'ஓரணியில் தமிழ்நாடு' உறுதியேற்பு பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

**தூத்துக்குடி, செப்.23-**

**செப்டம்பர் 21 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உடன்குடியில், தூத்துக்குடி தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்புரையாற்றினார்.**

அவரது உரை வருமாறு:-

"நாம் இந்த கூட்டம் தொடங்கும் முன்பே ஓர் உறுதிமொழியை எடுத்துக் கொண்டோம். தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்று...

அதேநேரத்திலே தமிழ்நாட்டின் உரிமைகளை விட்டுத் தரமாட்டேன் என உறுதிமொழியின் ஒவ்வொரு வரியிலும் சொல்லப்பட்டிருந்தது.

தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய நிதி தமிழின் அடையாளம் பாரம்பரியம் தமிழ்நாட்டு பிள்ளைகளுக்கான கல்வி நிதி, உரிமை, தமிழ்நாட்டின் பெண்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்களின் உரிமை., இவர்களுக்கு வரவேண்டிய நிதியை விட்டுத் தரமாட்டோம். இவற்றை மீட்பதற்கு போராடுவோம் என்று சூளுரை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இதைத்தான் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட அன்று முதல் அண்ணன் தளபதி செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஏனென்றால் ஒன்றியத்திலே பா.ஜ.க. ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. இந்த நாட்டின் பிரதமருக்கு அவரது கட்சியிலே இருப்பவர்கள் பெருமையாக சொல்லக் கூடிய பெயர் விசுவகுரு.

விசுவகுரு என்றால் உலகத்துகே ஆசிரியராக இருந்து குருவாக இருந்து வழி நடத்தக் கூடியவராம்.

பிரதமர் மோடி உலகம் முழுதும் சுற்றிக் கொண்டிருப்பார். இந்தியாவுக்கு எப்போதாவது வருவார்... இந்திய பிரதமர் இந்தியாவுக்கு வர்றதே என்றைக்காவது ஒரு நாள்தான். உலகம் சுற்றும் வாலிபன் என்று ஒரு படம் கூட வந்திருக்கிறது.

இப்படி உலகம் முழுவதும் சுற்றக் கூடிய இந்த விசுவகுரு, உலகத்தையே வழி நடத்துவதாக சொல்லக் கூடிய விசுவகுருவால் சுற்றியிருக்கக் கூடிய எந்த நாடுகளோடும் நல்லுறவு வைத்துக் கொள்ள முடியவில்லை.

நேபாளாக இருக்கட்டும், சீனாவாக இருக்கட்டும், பாகிஸ்தானாக இருக்கட்டும், இலங்கையாக இருக்கட்டும்...

சமீபத்தில் டிரம்ப் அமெரிக்காவில் வெற்றி பெற்றார். அங்கே யார் வெற்றி பெற்றார்கள் தோல்வியுற்றார்கள் என்று நாம் கவலைப்படவில்லை. ஏனெனில் அது அமெரிக்க தேர்தல். ஆனால் ஒரு கட்சி, டிரம்ப் வெற்றிபெற வேண்டும் என்று யாகம் வளர்த்தது. ஏன்? இஸ்லாமிய சகோதரசகோதரிகள் அமெரிக்கால் குடியேறக் கூடாது என்று டிரம்ப் தொடர்ந்து சொல்லிவந்ததால், அவர் ஜெயிக்க வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ், யாகம் வளர்த்தது.

#### விசுவகுருவின் நண்பர் என்ன செய்திருக்கிறார்?

அவர் வெற்றி பெற்ற பிறகு விசுவகுருவின் நண்பர் வெற்றி பெற்றுவிட்டார் என்று கொண்டாடித் தீர்த்தார்கள். இதே விசுவகுருவின் நண்பர் இன்று என்ன செய்திருக்கிறார்?

இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படுகிற பொருளா? 50% வரியை போடு. 50% வரி போட்டால், என்ன ஆகும் என்று வியாபாரிகளுக்கு தெரியும். ஒரு பொருளுக்கு திடீரென 50% வரி போட்டால் யாராவது அதை வாங்குவார்களா?

இன்றைக்கு தூத்துக்குடி துறைமுகத்திலே நம் ஊரில் இருந்து ஏற்றுமதியாக வேண்டிய மீன்கள் தேங்கிக் கிடக்கிறது. திருப்பூர் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. நாடு முழுவதிலிருந்தும் அமெரிக்காவுக்கு போக வேண்டிய பொருட்கள் தேங்கி வணிகம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இவர்தான் விசுவகுரு. இவர்தான் இந்தியாவை மிக சிறப்பாக, உலகத்தையே மிக சிறப்பாக வழிநடத்தும் சிறந்த பிரதமர்.

இனிமேல் இந்தியாவில் இருந்து அமெரிக்காவில் யாருக்கும் வேலை கிடைத்தாலோ, அங்கே போக வேண்டும் என்று குடிபெயர வேண்டும் ஹெச்1 பி 1 விசா வாங்க வேண்டும் என்றாலோ இந்தியர்கள் மட்டும் 88 லட்ச ரூபாய் கட்ட வேண்டும். இதுதான் உலகம் இந்தியாவை பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய நிலை. இதைத்தான் பிஜேபி ஆட்சி உருவாக்கி வைத்திருக்கிறது.

நம்முடைய முதலமைச்சர் வெளிநாடுகளுக்கு செல்கிறார். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலே போய் பேசுகிறார். அங்கே பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் படத்தைத் திறந்து வைத்துவிட்டு வருகிறார். முதலீடுகளோடு வருகிறார்.

நம் முதலமைச்சர் இருக்கும் மரியாதை என்ன என்று புரிந்துகொள்ளுங்கள். விசுவகுருவுக்கு என்ன மரியாதை என்ன என்று புரிந்து கொள்ளுங்கள். இது தமிழ்நாடு... அது டெல்லி.

டெல்லி நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டு இந்த நாட்டை வழிநடத்திக் கொண்டிருக்கிறது. இந்த பெருமையோடு இந்த மேடையில் நாம் நின்றுகொண்டிருக்கிறோம்.

நாம் கொண்டுவரக் கூடிய எத்தனையோ திட்டங்கள், இன்று இந்திய அளவில் மட்டுமல்ல உலக அளவில் முன் மாதிரியாக இருக்கின்றன. அப்படிப்பட்ட திட்டங்களைத்தான் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இங்கே வந்திருக்கக் கூடிய சகோதரிகள்,




தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உடன்குடியில், தூத்துக்குடி தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி., மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள் நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர் இளங்கோ, பாலசிங், திருச்செந்தூர் நகர் மன்ற துணை தலைவர் ஏ.பி. ரமேஷ், நவீன் குமார், ஏ.பி.சதீஸ்குமார், கே.கே.ஆர்.ஜெயக்கோடி, இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.பிரம்மசக்தி, பேரூர் கழக செயலாளர் மால் ராஜேஷ், மாவட்ட அவைத்தலைவர் அருணாச்சலம், மாவட்ட அயலக அணி டேனியல், மகளிர் அணி ஜெஸ்ஸி பொன் ராணி, பொருளாளர் ராமநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

உங்களுக்கு தெரியும்... ஒரு காலகட்டத்திலே உங்கள் அம்மா காலத்திலே, ஏன் சில நேரம் உங்கள் காலத்தில் கூட நடந்திருக்கலாம்.

'பொம்பளப் புள்ளைக்கு படிப்பு எதுக்கு?'னு வீட்லயே உக்கார வச்சிடுவாங்க. வாய்ப்பு வசதி இல்லையென்றால் படிக்க முடியாது.

இந்நிலையில்தான் தலைவர் கலைஞர் அவர்கள் பெண்கள் படிக்க வேண்டும் என்பதற்காக, பத்தாவது வரைக்கும் படித்தால் திருமண உதவித் தொகை நான் தருகிறேன் என்று அந்த பிள்ளைகளை பத்தாவது வரை படிக்க வைத்தவர் தலைவர் கலைஞர்.

பத்தாம் வகுப்பு படித்துவிட்ட பெண்கள் நிச்சயம் கல்லூரிக் கனவுகளோடு இருப்பார்கள் என்று, ஆட்சிக்கு வந்த நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், கல்லூரிக்கு போகக் கூடிய நம்ம வீட்டுப் பிள்ளைகளுக்காக மாதம் ஆயிரம் ரூபாயை வழங்கிக் கொண்டிருக்கக் கூடிய ஆட்சி நமது திராவிட மாடல் ஆட்சி.

அதேபோல மகளிர் உரிமைத் தொகை... உதவித் தொகை இல்லை, உரிமைத் தொகை. காலம் காலமாக உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு உரிமைத் தொகை வழங்கிக் கொண்டிருக்கக் கூடிய ஆட்சி நமது ஆட்சி.

விடியல் பயணம்... வேலைக்கு செல்லக் கூடிய வெளியே செல்லக் கூடிய பெண்கள் ஒவ்வொரு மாதமும் விடியல் பயணத்தால் கட்டணமில்லாமல் பேருந்தில் பயணிப்பதால் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் சேமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் கூட வேடிக்கையாக சொல்வதுண்டு... ஒரு காலகட்டத்திலே பெண்களை வெளியே போகாதே என்று சொல்லுவார்கள். இப்போது ஆண்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், 'நீங்க வெளிய போயிட்டு வாங்க.. நாங்க வீட்ல இருக்கோம். நீங்க வெளியே போனால் ஃப்ரீ... நாங்க வெளியே போனால் செலவு' என்று சொல்கிறார்கள்.

அமைச்சர் வருத்தப்படுகிறார். கவலைப்படாதீங்க உங்களுக்கும் ஒரு காலம் வரும். இது பெண்களின் காலம்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நமக்கான ஆட்சி. அதனால்தான் இந்தியாவிலேயே அதிகமான வேலைக்கு செல்லக் கூடிய பெண்கள் 42% என்ற பெருமையை பெற்றிருக்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது.

இந்த உடன்குடியில் நம்முடைய சுயமரியாதையின் அடையாளம். இந்த உடன்குடி என்ற பெயரே பிஜேபிக்கு எதிரானது.

பிஜேபியின் அரசியலே மக்களை பிரித்துப் பார்ப்பதுதான். நீ இந்துவா.. நீ முஸ்லிமா, நீ கிறிஸ்துவரா ... நாட்டார் தெய்வங்கள் வழிபடுகிறவர்களா.. நீங்களெல்லாம் தனித்தனி. இப்படி பிரித்தால்தான் அவர்களால் அரசியல் செய்ய முடியும், அதுதான் அவர்கள் சித்தாந்தம்.

ஆனால் உடன்குடி என்றால்... அத்தனை குடிகளும் இஸ்லாமிய குடிகளாக இருக்கலாம், அய்யா வழி குடிகளாக இருக்கலாம், நாட்டார் குடிகளாக இருக்கலாம், சைவ குடிகளாக இருக்கலாம், கிறிஸ்துவ குடிகளாக இருக்கலாம். அத்தனை குடிகளும் உடன்பட்டு வாழக்கூடிய ஊர் என்பதால் உடன்குடி.

இந்த ஊரே பிஜேபிக்கு எதிரான ஊர்.

நமது முதலமைச்சர், தமிழ்நாட்டுக்குள் பிஜேபிக்கு நோ என்ட்ரி என்று சொன்னார்கள். அந்த பெயரை வைத்தே பிஜேபிக்கு நோ என்ட்ரி சொல்ல வைத்த ஊர் உடன்குடி.

அவர்கள் நினைக்கலாம், நம்மை கருப்பட்டி போல இனிமையாக வரவேற்பார்கள் என்று. ஆனால், காய்ச்சிய கருப்பட்டியை தொட்டுப் பார்த்தால்தான் தெரியும் அது எவ்வளவு கடினமாக இருக்கும் என்று. அதை உடைக்க முடியாது.

போர்டை பார்த்தாலே, எல்லாரும் ஒன்றாக இணைந்து வாழக் கூடிய இடம் என்று தெரியும். அதனால் பெயரிலேயே பிஜேபி எதிர்ப்பை வைத்துக் கொண்டிருக்கும் உங்களை சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

அமைச்சர் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார்கள், தமிழ்நாட்டு பிள்ளைகளுக்கு வரவேண்டிய கல்வி நிதி...சமர சிக்ஷா அபியான் என்ற பெயர். அவர்கள் அப்படித்தான் இந்தியில்தான் பெயர் வைப்பார்கள். சாலைகளுக்கான பிரதமரின் திட்டத்துக்கு பெயர் பிரதான் மந்திரி கிராம் சடக் யோஜனா... இது யாருக்காவது புரிகிறதா? அது என்ன திட்டம் என்று நாம் கண்டுபிடிச்சு, எங்கள் ஊருக்கு வேண்டும் என்று எப்படி சொல்ல முடியும்?

ஒவ்வொருதிட்டத்திலும்இப்படித்தான்இந்தியிலோ சமஸ்கிருதத்திலோ பெயர் வைக்கிறார்கள்.

இப்போது கூட ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் சென்னைக்கு வந்து பேட்டி கொடுக்கிறார். 'நாங்கள் இந்தியை படிங்கனு சொல்லவில்லை,மூன்றாவது மொழி படிங்கனுதான் சொல்றோம்' என்று சொல்கிறார்.

நான் சொல்கிறேன்... 'நாங்க ரெண்டு மொழிதான் படிக்கிறோம். அவற்றை ஒழுங்கா படிக்கிறோம். எங்க பிள்ளைகள் நம் நாட்டில் இருந்து கடல் கடந்து வெளிநாடுகளுக்கும் போய் டாக்டர்களாக, பொறியாளர்களாக, ஐடி நிபுணர்களாக எங்க வீட்டுப் பிள்ளைகள் இருக்காங்க. சிலிகான் வேலிகளில் கோலோச்சுபவர்கள் தமிழ்நாட்டுப் பிள்ளைகள். பெரிய பெரிய நிறுவங்களை நடத்துபவர்கள் தமிழ்நாட்டுப் பிள்ளைகள்...நீங்கள் மூன்று மொழி படியுங்கள் என்று சொல்லி வட மாநிலங்களில் இருக்கக் கூடிய குழந்தைகள் ஒரு மொழியைக் கூட ஒழுங்காக படிக்கவில்லை.

நாட்டின் பல இடங்களுக்கு வேலை தேடிச் செல்லும் நிலையைதான் வட மாநில மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

ஆட்சிக்கு வந்ததும் ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களான கேந்திரிய வித்யாலயாவில் மூன்றாவது மொழியாக எதை வேண்டுமானாலும் படிக்கலாம். ஜெர்மன் கூட சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஜெர்மன் மொழியை படித்தால்... உலகின் பல புதிய டெக்னாலஜிஸ் அங்கே வருகிறது. உலகின் முதன்மையான கல்லூரிகள் இருக்கக் கூடிய இடம் ஜெர்மனி. தொழில்நுட்பத்தில் வேகமாக முன்னேறியிருக்கும் நாடு ஜெர்மனி. அந்த ஜெர்மன் மொழியை கேந்திரிய வித்யாலயாவில் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்கள் ஆட்சிக்கு வந்ததும், வெளிநாட்டு மொழிகளான ஜெர்மனியை எல்லாம் ஏன் கற்றுத் தர வேண்டும்? நமது மொழியான சமஸ்கிருதத்தை மட்டுமே சொல்லிக் கொடுப்போம் என்றார்கள்.

அதுவரையிலும் இங்கே ஜெர்மன் கற்ற மாணவர்கள் ஜெர்னமிக்கு போய் உயர் கல்வி பயின்றால், அங்கே உயர் கல்வி இலவசம். ஆனால் இன்று அந்த கதவுகளையும் அடைத்திருக்கக் கூடிய ஆட்சி பாஜக ஆட்சி.

இப்போது சமஸ்கிருதம் படிக்கிறார்கள். சரி அவர்களை கோயிலுக்குள் விட்டுவிடுவீர்களா? தமிழ்நாட்டில் மாற்றிவிட்டோம். அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம். வேறு எந்த மாநிலத்தில் உள்ளே விடுவீர்கள். சமஸ்கிருதம் படித்து அந்த மாணவர்கள் என்னசெய்வது?

கோடிகோடியாக சமஸ்கிருத வளர்ச்சிக்கு கொண்டு கொட்டுகிறீர்கள். தமிழுக்கு எதுவும் கிடையாது.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான நான் என் தொகுதி மக்களுக்காக உங்களுக்காக ஒரு கடிதம் ஒன்றிய அமைச்சருக்கு ஆங்கிலத்திலே எழுதுகிறேன். உனக்கும் ஆங்கிலம் தெரியும். எனக்கும் ஆங்கிலம் தெரியும். ஏன் இந்தியில் பதில் போடுகிறீர்கள்? அங்கேயும் மொழியைத் திணிக்க வேண்டும்.

எங்கள் மக்கள் மீது உங்களுக்கு அக்கறை இல்லை. உங்களுக்கு இந்தியை திணிக்க வேண்டும் அவ்வளவுதான். அதேபோல இந்தி படித்தால் தான் எஸ் எஸ் ஏ ஃபண்ட் 5 ஆயிரம் கோடியை தருவோமென்று அகங்காரத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஒன்றிய ஆட்சி பாஜக ஆட்சி.

#### பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக போராடிக் கொண்டிருக்கிறோம்!

நாங்கள் உங்களிடம் சும்மா கேட்கவில்லை. இங்கே தமிழ்நாட்டின் உற்பத்தி என்பது 9.2%. நாங்கள் உங்களுக்குக் கொடுக்கும் நிதியில் தமிழ்நாட்டுக்கு நீங்கள் வரிப்பகிர்வாக கொடுப்பது 4 சதவிகிதம்தான். நாங்கள் கொடுத்த காசை எங்கள் பிள்ளைகளுக்காக திரும்பக் கேட்கிறோம். அதைக் கொடுக்க மறுக்கக் கூடிய ஆட்சி ஒன்றிய பாஜக ஆட்சி.

நாங்கள் எங்கள் உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக்கிறோம். எங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக போராடிக் கொண்டிருக்கிறோம்.

நமது தலைவர் கலைஞர் நம் வீட்டுப் பிள்ளைகளும் மருத்துவப் படிப்பு படிக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாவட்டம் தோறும் மருத்துவக் கல்லூரிகளைக் கொண்டுவந்தார். ஆனால், நீட் போன்ற பரிட்சைகளைக் கொண்டுவந்து எங்களுடைய மருத்துவக் கல்லூரிகளிலேயே எங்கள் பிள்ளைகள் படிக்க முடியாத நிலைமையை உருவாக்கியிருப்பது ஒன்றிய ஆட்சி.

இப்படித் தொடர்ந்து தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து துரோகம் செய்துகொண்டிருக்கக் கூடியவர்களோடு தான்... எடப்பாடி பழனிசாமி நான்கு வருடம் தூங்கி எழுந்து இப்போது கை கோர்த்துக் கொண்டிருக்கிறார்.

திமுக ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததில் இருந்து அவரைக் காணோம். இப்போது திடீரென அவரை டெல்லியில் கண்டுபிடித்திருக்கிறார்கள். அமித் ஷா வீட்டு வாசலில் காரில் வெளியே வருகிறார். வெளியே வரும்போது பத்திரிகையாளர்கள் சூழ்ந்துகொண்ட போது முகத்தை கர்ச்சிப்பால் மறைத்துக் கொண்டார். கேட்டால் துடைத்துக்கொண்டேன் என்கிறார்.

#### யாரைப் பார்த்து அவருக்கு வியர்த்தது?

யாரைப் பார்த்து அவருக்கு திடீரென வியர்த்தது? உள்ளே இருக்கும் அமித் ஷாவை பார்த்து வியர்த்ததா? வெளியே இருக்கும் பத்திரிகையாளர்களை பார்த்து வியர்த்ததா?

அதிமுகவுடைய அலுவலகத்தையே டெல்லிக்கு மாற்றிவிட்டார்கள். அதிமுகவின் அலுவலகமே அமித்ஷாவின் டெல்லி வீடுதான். யாருடன் யாருக்கு என்ன பஞ்சாயத்தாக இருந்தாலும் அங்கே போய் தான் தீர்க்க வேண்டும்,

இப்படி ஒரு கட்சியை நடத்திக் கொண்டு, தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து துரோகம் செய்துகொண்டிருக்கக் கூடிய ஒன்றிய அரசாங்கத்தோடு கூட்டணி வைத்திருக்கிறார்.

கீழடியில் தமிழர்களின் பெருமைகளை சொல்லக்கூடிய அகழாய்வை நாம் கண்டெடுத்திருக்கிறோம்.

உலகில் மற்றவர்கள் எல்லாம் மொழி வடிவம் என்னவென்று தெரியாத காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்தபோது, வியாபாரம் என்றால் என்னவென்றே தெரியாத காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருந்தபோது சங்கம் வைத்து தமிழ் வளர்த்த நமது தொன்மை நாகரிகம் பற்றிய கண்டுபிடிப்புகளை நாம் ஆய்வறிக்கைகளாக வெளியிடுகிறோம். அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனது ஒன்றிய அரசுக்கு கிடையாது.

நமது ஊரை எடுத்துக் கொள்வோம். ஆதிச்சநல்லூரில் உலகில் வேறு எந்த இடத்திலும் கிடைக்காத அளவுக்கு, பழமையான காலத்தில் இரும்பு பயன்படுத்தப்பட்டதாக கண்டறிந்திருக்கிறோம். ஆதிச்சநல்லூரில் வாழ்ந்த தமிழர்கள் இரும்பை உருக்கி பயன்படுத்தியிருக்கிறார்கள். 5 ஆயிரம் வருடங்களுக்கு முன்பே இதற்கு எவ்வளவு அறிவு தேவைப்பட்டிருக்கும்... எவ்வளவு அறிவியல் தேவைப்பட்டிருக்கும்? இதெல்லாம் அறிந்த தமிழ் சமூகம் அந்த இடத்திலே வாழ்ந்திருக்கிறது என்பதை முதலமைச்சர் சொல்லவில்லை, அமைச்சர்கள் சொல்லவில்லை, திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லவில்லை.

இந்த கண்டுபிடிப்புகளை எல்லாம் உலகில் மிக பெரிய ஆய்வகங்களுக்கு அனுப்பி ஆய்வு செய்துவிட்டு நமது முதலமைச்சர் அறிவிக்கிறார். இனிமேல் உலக சரித்திரத்தை தமிழ்நாட்டில் இருந்து தான் எழுத வேண்டும் ஏனென்றால்... இரும்பின் காலம் தொடங்கியது தமிழ்நாட்டில்தான் என்று நமது முதலமைச்சர் அறிவிக்கிறார்.

'எனக்கு தமிழ் மீது பற்று... நான் தமிழனாக பிறக்கவில்லையே என்ற வருத்தம்... திருக்குறளை, தமிழின் பெருமையை ஐ.நா.வில் போய் பேசியிருக்கிறேன்' என்று சொல்லக்கூடிய காசியிலே தமிழ் சங்கமம் நடத்தியிருக்கிறோம் என்று பெருமை பேசிக் கொள்ளக் கூடிய ஒன்றிய அரசோ, பிரதமரோ இதுவரை தமிழின் தொன்மையை பற்றி அதன் பெருமையை பற்றி எங்காவது வாய் திறந்திருக்கிறார்களா? இல்லை.

ஏனென்றால் நீங்கள் நிறுவக் கூடிய பழமை, வேத காலம் என்பது பற்றியெல்லாம் நீங்கள் சொல்லக் கூடிய மாயையை இங்கே இருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் முதல்வர் அறிவியல் பூர்வமாக உடைத்தெறிந்திருக்கிறார்.

அதை ஏற்றுக் கொள்ள மனமில்லாமல், தமிழின் தொன்மையை எதிர்க்கக் கூடிய ஆட்சிதான் ஒன்றிய ஆட்சி.

அந்த ஆட்சியோடுதான் இன்று கை கோர்த்துக் கொண்டு வலம் வருகிறார் எடப்பாடி பழனிசாமி.

அதனால் தமிழுக்கு, தமிழ் நாட்டுக்கு, தமிழ் மக்களுக்கு நம் பிள்ளைகளுடைய எதிர்காலத்துக்கு பகையாக இருக்கக் கூடியவர்கள் யார் என்பதை புரிந்துகொண்டு வரக் கூடிய தேர்தலிலே நாம் சரியாக வாக்களிப்போம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

தமிழ்நாட்டில் அவர்களுக்கு இடமில்லை என்று தெளிவாக இருக்கக் கூடியவர்கள் நாம்.

ஆனால் அவர்கள் பல திட்டங்களுடன் தேர்தலுக்கு வரக் கூடியவர்கள். பிகாரில் பல லட்சம் ஓட்டுகள் காணவில்லை. பொதுவாக மக்களை சந்தித்து மக்கள் ஆதரவோடுதான் நாம் ஆட்சிக்கு வந்தோம், வருகிறோம். ஆனால் பிஜேபி தேர்தல் கமிஷனை சந்தித்து தேர்தல் கமிஷன் ஆதரவோடுதான் ஆட்சிக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.

அதனால் விழிப்போடு இருங்கள். உங்கள் வாக்குகள் சரியாக இருக்கிறதா என்று மறுபடியும் தெரிந்துகொள்ளுங்கள், சரி பாருங்கள்.

ஏனென்றால் தமிழகத்தின் வளர்ச்சி, பிள்ளைகளின் எதிர்காலம், தமிழின் பெருமை இவை அத்தனையும் நம் கைகளில் இருக்கிறது. அந்த வாக்குச்சாவடிகளில் நாம் இடக் கூடிய வாக்குகளில் இருக்கிறது என்ற உணர்வோடு நாம் செயல்பட வேண்டும்.

மீண்டும் நம்முடைய முதலமைச்சர் தளபதி அண்ணன் அவர்களுடைய ஆட்சி, தமிழகத்தை தலை நிமிர வைக்கக் கூடிய ஆட்சி மலரும். நன்றி"

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் உரையாற்றினார்.

உடன், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான அனிதா இராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்!